www.padippakam.com

# தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம்

## PEOPLE'S LIBERATION ORGANIZATION OF THAMILEELAM




## தமிழீழத்தின் குரல்

பூட்டான் பேச்சுவார்த்தை சம்பந்தமாக தமிழீழ மக்கள் விடுதலைக் கழகச் செயலதிபர் தோழர் உமாமகேஸ்வரன் தமிழீழத்தின் குரல் வானொலியில் ஆற்றிய உரை.

எமது அன்பான தோழர்களே, தமிழ்மக்களே!

பூட்டான் திம்புவில் இலங்கைத்தமிழர் பிரச்சனைக்கான 2வது கட்ட பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகும் இத்தருணத்திலே, உங்களில் அநேகமானவர்களினது நம்பிக்கைக்கும் எதிர்பார்ப்புக்கும், விமர்சனங்களுக்கும், உரித்தான ஓர் ஸ்தாபனத்தின் செயலதிபர் என்ற வகையில், சில விடங்களைப் பற்றி உங்களுக்கு தெரிவிக்கலாம் என நினைக்கின்றேன்.

திம்புவில் நடைபெறும் இப்பேச்சுவார்த்தை பற்றி எத்தனையோ அபிப்பிராயங்கள், கருத்துக்கள் அறிக்கைகள் எல்லாம் பல்வேறு தலைவர்களாலும், பல்வேறு இயக்கங்களாலும் வெளியிடப்பட்டுவிட்டன. இந்நிலையில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் நிலைப்பாடு என்ன? அது என்ன செய்யப்போகிறது? என்ற கேள்விகள் மனதில் இழு வெளிப்படுவதை நாம் அறிவோம். உண்மையில் நாம் என்ன செய்யப்போகின்றோம்? இக்கேள்விகளுக்கு விடையளிக்க முன்பு நாம் எதற்காகப்போராடுகின்றோம்? என்பதை தெளிவாகவும், அழுத்தம்திருத்தமாகவும், சொல்லி வைக்கவேண்டியுள்ளது.

ஏதோ ஆயுதப்படைகளை எதிர்த்துப்போராடவேண்டும் என்பதற்காகவோ, இராணுவ முகாங்களையும் பொலிஸ்நிலையங்களையும் தாக்கியழித்து எங்களை விளம்பரம் செய்ய வேண்டும் என்பதற்காகவோ, அநாவசியமாக ஒருநாட்டை துண்டாடவேண்டும் என்பதற்காகவோ, நாம் இந்த ஆயுதப்போராட்டத்தை முன்னெடுக்கவில்லை. மிகநீண்டகாலமாகவே அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டு, இரண்டாம்தரப்பிரஜைகளாகப்பட்டு, உடமைகளையும் ,மானத்தையும் இழந்து பலர் அகதிகளாக்கப்பட்ட எமது தேசியஇனத்தின் இன்னலை போக்கவும், இழந்த உரிமைகளை மீட்டெடுக்கவும், உலகிலுள்ள ஏனையமக்களுக்கு சரிநிகர்சமானமாக எமது மக்களும் சகல உரிமைகளையும் பெற்று தலைநிமிர்ந்து வாழவேண்டும் என்பதற்காகவுமே, இந்த ஆயுதப்போராட்டத்தை நடத்திக்கொண்டிருக்கின்றோம். அதிலும் இழந்த உரிமைகளை மீட்க பல்வேறு அரசியல் தீர்வுகளை முன்வைத்து எமது மக்கள் நடாத்திய போராட்டங்கள் எல்லாம் மழுங்கடிக்கப்பட்டு தோல்வியைத் தழுவிய நிலையிலேதான், எமது இனத்தின் எதிர்காலம் இருளாகிவிட்ட ஒரு சூழ்நிலையிலேதான், தமிழீழக் கோரிக்கை அன்றைய தலைவர்களால் முன்வைக்கப்பட்டது. அதுவும் இலங்கைத்தீவில் தமிழ்த்தேசிய இனம் தன்மானத்தோடு வாழவேண்டுமென்றால் அதற்கு தமிழீழத்தைத் தவிர வேறுவழியில்லை, தமிழீழம் ஒன்றுதான் எமது பிரச்சனைக்கு இறுதித்தீர்வு, என்ற நிலை ஏற்பட்டபின்புதான் நாம் இந்த ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்தோம்

நாம் போராடவேண்டும் என்பதற்காக தமிழீழம் கேட்கவில்லை. அதேநேரம் உலகில் 'தமிழனுக்கென்று ஒரு நாடு வேண்டும் என்பதற்காகவும் தமிழீழம் கேட்கவில்லை, எமது மக்களின் அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும், உடமைகளுக்கும் மானத்திற்கும் உத்தரவாதமளிக்கப்படவேண்டும், இது தமிழீழ மக்களின் ஜனநாயக மக்கள் குடியரசு ஒன்றை நிறுவுவதன் மூலம் தான் சாத்தியமாகும், என்பதை உறுதியாக தெரிந்துகொண்டபின்தான், இந்த தமிழீழ விடுதலை போராட்டத்தை முன்னெடுத்துள்ளோம். இவ்வாறு முன்னெடுக்கப்பட்ட தேசிய விடுதலைப் போராட்டமானது, இன்று ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டமாக மாற்றப்பட்ட ஒரு காலகட்டத்திலே தான் எதிரி இன்று திம்புவிலே பேச்சுவார்த்தை நடத்த எம்மை அழைத்திருக்கின்றான். இந்த பேச்சுவார்த்தை அழைப்புக்கிடைத்தவுடன் எமது சகோதர இயக்கங்கள், தாம் பேச்சுவார்த்தையில் கலந்துகொள்ளப்போவதில்லை என அறிக்கைகள் விடுத்தன. பின்பு பேச்சுவார்த்தை ஆரம்பிக்கும் போது இந்திய அரசு எம்மை வற்புறுத்தியது எனவே தான் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்கின்றோம் என பத்திரிகைகளில் அறிக்கை விடுத்தனர். ஆனால் எமது கழகம் அவசரப்பட்டு எந்த முடிவும் எடுக்கவில்லை, அத்துடன் அறிக்கைகளும் விடவில்லை. இந்திய அரசு எங்களுடைய ஆலோசனையையும் அபிப்பிராயத்தையும் கேட்டதேயன்றி எந்தவிதத்திலும் எம்மை நிர்ப்பந்திக்கவில்லை நாம் இப்பேச்சுவார்த்தை தொடர்பாக சரியான மதிப்பீட்டைக் கொண்டிருந்தமையே இதற்குக் காரணமாகும்.

இப்பேச்சுவார்த்தையில் முக்கியசக்தியாக விளங்கக்கூடிய எமது எதிரியையும், இந்திய மத்தியஅரசையும், எமக்காக குரல் கொடுக்கக்கூடிய இந்திய மக்களையும், நாம் எடுத்து வைக்கின்ற ஒவ்வொரு அடியையும், மிக உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருக்கின்ற உலக முற்போக்கு சக்திகளையும், மற்றும் எமது பிரச்சினையில் அக்கறையுள்ள உலகநாடுகளின் போக்கையும் நாம் மிக சரியாகவே எடைபோட்டோம். இப்பேச்சுவார்த்தை தொடர்பாக எமக்கு ஏற்படக்கூடிய சாதகமான நிலைமைகளையும், பாதகமான நிலைமைகளையும், மிகவும் ஆழமாக ஆராய்ந்து பார்த்தோம். ஸ்ரீலங்கா அரசு பேச்சுவார்த்தை எனக்கூறி, பலமுறை எமது மக்களையும் தலைவர்களையும் ஏமாற்றியிருக்கிறது. ஸ்ரீலங்கா ஆட்சியாளர்கள் நீட்டும் நேசக்கரங்களுக்குப் பின்னால், கொடூரமான அடக்கு முறைகள் இருந்திருக்கின்றன. கூட்டப்படும் ஒவ்வொரு மகாநாட்டு மேசைகளிலும் தமிழ் மக்களுக்கு எதிரான அரசியல் சதித்திட்டங்கள் அரங்கேற்றப்பட்டிருக்கின்றன.

படிப்பகம்

www.padippakam.com

எல்லாவற்றையும் தெரிந்துகொண்டுதான் நாம் இந்த பேச்சுவார்த்தை மேடைக்கு சென்றிருக்கிறோம். நாம் இந்த பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டதனால் ஆயுதப்போராட்டத்தை கைவிட்டுவிட்டோம் என்று அர்த்தமல்ல. தமிழீழ மக்கள் ஜனநாயக குடியரசு ஒன்றை நிறுவுவது என்ற இலட்சியத்தை கைவிடப்போவதில்லை. அந்த இலட்சியத்தை ஈடேற்றுவதற்கான ஆயுதப்போராட்ட தயாரிப்புகளை நாம் தொடர்ந்து செய்து கொண்டுதான் வருகிறோம். எந்தவொரு இனப்பிரச்சினையிலேயும் அரசியல் ரீதியிலானதீர்வு இராணுவரீதியிலானதீர்வு, என்ற இருவகையான தீர்வுகள் இருக்கின்றன. அரசியல்ரீதியிலான தீர்வு தோல்வியடைந்தபின் இராணுவரீதியிலான தீர்வு ஏற்படுவதுமுண்டு. எமது மக்களின் அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும் என்பதற்காக ஆயுதமேந்திய நாம், ஒரு அரசியல் தீர்வினூடாக அடிப்படைஉரிமைகள் நிரந்தரமாக பாதுகாக்கப்படுமாக இருந்தால், அரசியல் தீர்வு சம்பந்தமான பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டு அதுபற்றி பேசுவதற்கு தயாராகவுள்ளோம். அதேசமயத்தில் இவ் அரசியல்ரீதியிலான தீர்வு சாத்தியமாகாத பட்சத்தில், இராணுவரீதியிலான தீர்வு ஆயுதப்போராட்டத்தை முன்னெடுக்கவும் தயாராகவுள்ளோம். அதற்கு சாதகமான சில சூழ்நிலைகளை சர்வதேச முற்போக்கு சக்திகள் மட்டத்திலும், சோஷலிசநாடுகள் மட்டத்திலும், இப்பேச்சுவார்த்தை உருவாக்கித் தருவதோடும், எமது இராணுவம் சம்பந்தமான விடயங்களிலும் நிறைவையடைய துணைபுரியும் என்பதை உறுதியாக நம்புகிறோம்

நாம்பேச்சுவார்த்தை மேடைக்கு செல்லும்போதே, எதிரி எம்மை ஏமாற்றி விடுவான், எதிரி எமக்கு அடிப்படை உரிமைகளை தரமாட்டான், என்பது போன்ற அவநம்பிக்கையான கருத்துக்களை வெளிப்படையாக சொல்லிக்கொண்டு செல்லவில்லை. அதேசமயம் இப் பேச்சுவார்த்தையில், எமது பிரச்சினைக்கான நிரந்தரத்தீர்வு எதையும் எதிரி வழங்கிவிடப்போவதில்லை, என எமக்கு தெரியும். ஆனால் எமது அடிப்படை உரிமைகளைகூட வழங்கும் நிலையில், எமது எதிரி இல்லையென்பதை எதிரியின் நடத்தையை கொண்டே சர்வதேசரீதியில் அதை நிரூபிக்கவும், அதன் மூலம் எமது போராட்டத்தை நியாயப்படுத்தவும், இப்பேச்சுவார்த்தை எமக்கு சந்தர்ப்பமளிக்கும். இப்பேச்சுவார்த்தைகளில் எமது அடிப்படைஉரிமைகளுக்குக் குறைந்த எந்தவொரு அரசியல் தீர்வையும் ஏற்றுக்கொள்ள போவதில்லை. அதேசமயம் இலங்கையில் வாழும் முஸ்லிம் மற்றும் மலையக மக்களின் அடிப்படைஉரிமைகளை பாதுகாக்கும்வகையில் அமையாத, அவர்களுக்கு துரோகம் செய்யக்கூடிய எந்தவொரு தீர்வையும் நாம் அங்கீகரிக்கமாட்டோம் என உறுதியுடன்கூறிக்கொள்கிறோம்.

வெளியில் இயக்கங்களுக்கிடையில் பல்வேறு முரண்பாடுகள் இருந்தபோதிலும் மகாநாட்டு மேசையில் நாம் பெரும்பாலும் அனைத்து இயக்கங்களுடனும் ஒற்றுமைபேணுவதில் முன்னின்று செயற்பட்டிருக்கிறோம். எதிர்வரும் பேச்சுவார்த்தைகளிலும் இத்தைய ஒற்றுமையை பேணுவதில் முன்னிற்போம். கடந்த பேச்சுவார்த்தைக்கு இயக்கத்தின்சார்பில் கிழக்குமாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில், எமது அரசியல் பிரிவுச்செயலாளர்: தோழர் வாசுதேவாவையும், வடமாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தோழர் சித்தார்த்தனையும் அனுப்பியிருந்தோம். தற்போது இஸ்லாமிய மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தோழர் முகமட் பிறேம் நவாஸ் என்பவரையும் மேலதிகமாக அனுப்பிவைத்துள்ளோம். கடந்த பேச்சுவார்த்தையில் 1984 ல் நடந்த வட்டமேசை மகாநாட்டின் போது, தமிழ்த் தலைவர்களால் நிராகரிக்கப்பட்ட தீர்வுகளையே ஸ்ரீலங்கா அரசு மீண்டும் முன்வைத்தது. அதனை ஏனைய இயக்கங்களுடன் சேர்ந்து நாமும் நிராகரித்ததோடு சில குறைந்தபட்ச கோரிக்கைகளை முன்வைத்தோம். எமது அடிப்படை உரிமைகளை ஏற்றுக்கொள்ளாத நிலையிலேயே ஸ்ரீலங்கா அரசு இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தைக்கு வந்துள்ளது. எமது எதிரி தொடர்ந்தும் அவநம்பிக்கையூட்டும் விதத்தில் நடந்துவருகின்றபோதிலும், நாம் தொடர்ந்தும் நம்பிக்கையுடன் செயற்பட்டு வருகிறோம். எமது கழகத்தைப் பொறுத்தவரையில் எமது மக்களின் அடிப்படை உரிமைகளை பாதுகாப்பதற்காக தமிழீழ மக்கள் ஜனநாயக குடியரசை நிறுவுவது ஒன்றே என்ற எமது இலட்சியப்போராட்டத்தில் தொடர்ந்து முன்னேறிக்கொண்டிருக்கிறோம்.

அதே சமயம் இப்பேச்சுவார்த்தை மூலம் கிடைக்கும் காலஅவகாசத்தினை பயன்படுத்தி, எதிரி தன்னை பலப்படுத்திக்கொள்வான் என்ற ஐயப்பாடும் பலருக்குண்டு. உண்மையில் சர்வதேச பிற்போக்கு சக்திகளின் பக்கபலத்தோடு, எமது போராட்டத்தை ஒடுக்க கங்கணம் கட்டிக்கொண்டிருக்கும் எமது எதிரியை, வெறும் உணர்ச்சிவசப்பட்ட தாக்குதல்களாலோ, பழிவாங்கல்களாலோ, வெற்றி கொள்ள முடியாது என்பதை நாம் நன்கு அறிவோம். இனவாதத்தை அடிப்படையாக கொண்டுசெயற்படும் எதிரியை, நாமும் இனவாதநோக்குடனேயே எதிர்ப்போமாக இருந்தால், நிச்சயமாக தோல்வியையே தழுவிக்கொள்வோம். எமது எதிரிகளிடையில் உள்ள முரண்பாடுகளேதான் எமது வெற்றிக்கு உதவுவதாக இருக்கும்.

நாம் பழிவாங்கும் உணர்ச்சியிலும் மேற்கொள்ளும் இனவாத தாக்குதல்கள், எதிரியை மேலும் மேலும் ஒற்றுமைப்படவும் பலமுள்ளவனாக்கவும் உதவும், என்பதை நாம் ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ளவேண்டும். சிங்கள முற்போக்கு சக்திகளின் ஆதரவோடும், உலகின் முற்போக்குசக்திகளின் ஒத்துழைப்போடும், நடவடிக்கைகளை மேற்கொள்வோம் என, நாம் உறுதி கூறுகிறோம். எம்மீது நீங்கள் வைத்திருக்கும் நம்பிக்கைக்கும், எதிர்பார்ப்புகளுக்கும், துரோகம் செய்யமாட்டோம் என உறுதி கூறிக்கொள்கிறோம்.

அனைத்து அடக்கு முறைகளையும் உடைத்தெறிவோம்

PEOPLE'S LIBERATION ORGANIZOTION
OF THAMILEELAM (FRANCE BRANCH)

People's Liberation Organization of Thamil Eelam,

வெளியீடு: செய்தி-மக்கள் தொடர்புப்பிரிவு, தமிழீழ மக்கள் விடுதலை கழகம். [பிரான்சுக்கிளை]

படிப்பகம்